


துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி* பாக நிலை முகவர்கள்– BLA2 பாக சமூக வலைதள முகவர்கள்– BDA இளைஞரணி அமைப்பாளர்கள்– BYAஅவசர ஆலோசனை கூட்டம் 02.11.2025 நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர் பாபு SIR செயல்பாடுகள் குறித்து விழிப்புடன் பொதுமக்களை சந்தித்து ஆற்ற வேண்டிய களப்பணிகள் குறித்து பாக முகவர்கள் கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கினார். இதில் துறைமுகம் தொகுதி பார்வையாளர் இரா. நரேந்திரன், கே.எஸ். ரவிச்சந்திரன், பி. ஸ்ரீராமுலு எம்.சி., பகுதி கழக செயலாளர்கள் எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, மாமன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதி பருத்திப்பட்டு பசுமை பூங்காவில் அமைந்துள்ள ஏரியை தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பார்வையிட்டார் உடன் ஆவடி மாநகர மேயர் கு.உதயகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், மண்டல குழு தலைவர் திரு ஜி ராஜேந்திரன், மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### இராணிப்பேட்டை மாவட்டத்தில்

# 23,000 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்! துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்குகிறார்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கை!



இராணிப்பேட்டை, நவ. 3 -

இராணிப்பேட்டை மாவட்ட செயலாளர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி விடுத் துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வருகை குறித்து இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு இன்று (3.11.2025) கழக இளைஞரணி செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நமது மாவட்டத்திற்கு காலை முதல் மாலை வரை பல்வேறுஅரசு நிகழ்ச்சி களில் 23000 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி வழங்கியும், கழக நிகழ்ச்சி களிலும் கலந்து கொண்டு சிறப்பு செய்கிறார்கள். காலை 10.00 மணிக்கு இராணிப்பேட்டை நகராட்சியில் பெருந்தலைவர் காமராஜர்அவர்கள் தங்கியிருந்த நினைவு இல்லம் திறப்பு விழா.

• காலை 10.15 மணிக்கு Geekay உலகப்பள்ளி இறகு பந்து உள்விளையாட்டு அரங்கம் திறந்து வைத்து சிறப்பிக்கிறார்.

• இராணிப்பேட்டை அம்மூர் சமத்துவபுரம் எதிரில் - 10.30 மணியளவில் அரசு நலத்திட்டங்களை வழங்கி சிறப்புரை நிகழ்த்துகிறார்.

• காலை 11.00 மணிக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் ஆற்காட்டில் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி எதிரில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் திறந்து வைக்கிறார்

• 11.30மணிக்கு ஆற்காடு,விளாப்பாக்கம், ஸ்ரீ மகாலட்சுமி கலை கல்லூரி“கலைஞர் உடன்பிறப்புக்களுடன் உரையாடல்” நிகழ்ச்சி நடத்துகிறார்.

• மேற்கண்ட அனைத்து நிகழ்சிகளிலும் நமது மாவட்டத்தில் உள்ள கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிகு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

பாசிச பா.ஜ.க. அரசு எதிர்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் உள்நோக்கத்தோடு தீவிர வாக்கு சிறப்பு சுருக்க திருத்த திட்டத்தை நடைமுறைபடுத்த திட்டமிட்டுள்ளதின் ஒரு பகுதியாக நமது தமிழ்நாட்டிலும் நவம்பர் முதல் வாரத்தில் நடத்தப்படவுள்ளது (S.I.R)அது சமயம், மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், செயலாளர்கள், கழக சார்பு அணியின் நிர்வாகிகள் குறிப்பாக BLA2, BLC, BDA ஆகியோர் ஒன்றிணைந்து விழிப்போடு இருந்து பாசிச பா.ஜ.கவின் ஜனநாயகமற்ற உள்நோக்கத்தை தகர்த்தெரிந்து உண்மையான தகுதி வாய்ந்த வாக்காளர்களை இடம் பெற செய்திட தலைமைக் கழகம் என்ன வழிமுறைகளை நமக்கு வகுத்தளிதுள்ளதோ, அதன் அடிப்படையில் தீவிரமாக கடைபிடித்து செயலாற்றுவோம், வெற்றி வாகை சூடுவோம் என்தீர்மானிக்கப்படுகிறது.

SIR க்கு ஏதுவாக தலைமைக்கழகத்திலிருந்து அளிக்கபட்டுள்ள நோட்டு புத்தகத்தில் வேறு தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்த வாக்காளர்கள், இறந்த வாக்காளர்கள், தொகுதிக்குள் இடம் பெயர்ந்த வாக்காளர்கள், 18 வயது நிரம்பிய முதல் வாக்காளர்கள் அவர்களிடம் உள்ள அடையாள ஆவணங்கள் போன்றவற்றை BLC சரிபார்த்து குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தகுதியுள்ள எந்த வாக்காளர் பெயரும் வாக்காளர் பட்டியலில் விடுபடாமல் பார்த்துக் கொள்வதும், தகுதியற்ற எந்த ஒரு நபரும் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுவிடாமல் பார்த்துக் கொள்வதும் அடுத்த ஒரு மாதத்தில் நமக்கு உள்ள தலையாய பணியாகும்.

இப்பணிகளில் உள்ளூர் கழக வழக்கறிஞரணியும், தகவல் தொழில்நுட்ப அணியும் பகுதிநகரஒன்றியபேரூர் கழகச் செயலாளர்களுக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் ஆர்.காந்தி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### சேலம் மாநகராட்சிப் பகுதிகளில்

# ரூ.37.03 கோடியில் சாலை மேம்பாட்டு பணிகள்!

## அமைச்சர் இரா. இராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!

சேலம்,நவ.3-

சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் ரூ.37.03 கோடி மதிப்பீட்டிலான சாலை மேம்பாட்டுப்பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் , மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நேற்று (02.11.2025) தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அரசின் அனைத்து திட்டங்களையும் அனைத்து தரப்பு மக்களுக்கும் கொண்டு சேர்ப்பதில் முனைப்புடன் செயலாற்றி வருகிறார்கள். குறிப்பாக பொதுமக்களுக்குத்தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், சாலை வசதிகள், கழிவுநீர் கால்வாய்கள் அமைத்திடவும், நியாயவிலைக்கடைகள், தெருவிளக்குகள், பொது பயன்பாட்டு கட்டடங்கள் உள்ளிட்டவற்றின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும் தேவையான நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் இன்றையதினம் சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.12.95 கோடி மதிப்பீடில் 141 சாலை மேம்பாட்டு பணிகள் 27.139 கி.மீ நீளத்திற்கும், மாநில நிதிக்குழு மானியத்தில் ரூ.11.56 கோடி மதிப்பீட்டில் 114 சாலை மேம்பாட்டு பணிகள் 15.51 கி.மீ நீளத்திற்கும், சிறப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ.12.52 கோடி மதிப்பீட்டில் 135 சாலை மேம்பாட்டு பணிகள் 20.97 கி.மீ நீளத்திற்கும் என மொத்தம் ரூ.37.03 கோடி மதிப்பீட்டில், 63.63 கி.மீ நீள 390 சாலை மேம்பாட்டுப்பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இன்றையதினம் தொடங்கி வைக்கப்பட்ட அனைத்து பணிகளையும் உரிய கால அளவில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சேலம் மாநகராட்சி ஆணையாளர் மா.இளங்கோவன், சேலம் மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, அஸ்தம்பட்டி மண்டல குழு தலைவர் திருமதி உமா ராணி, மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் ரூ.37.03 கோடி மதிப்பீட்டிலான சாலை மேம்பாட்டுப்பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நேற்று (02.11.2025) தொடங்கி வைத்தார். உடன் சேலம் மாநகராட்சி ஆணையாளர் மா.இளங்கோவன், சேலம் மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, அஸ்தம்பட்டி மண்டல குழு தலைவர் திருமதி உமாராணி உள்ளிட்ட தொடர் புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில்

# ஒன்றியம் - நகரம் - பகுதி - பேரூர் வாரியாக கழக செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ. அன்பரசன் அறிவிப்பு!



நாம் நாளும் உயிராய் போற்றி வணங்கும் - நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் - முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சீரிய தலைமையில் மாமல்லபுரத்தில் நடைபெற்ற “ என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி” பயிற்சிக் கூட்டத்தில் 2026 - சட்டமன்றத் தேர்தலை சிறப்பான முறையில் எதிர்கொள்வதற்காக நம்முடைய ஒப்பற்ற தலைவர் அவர்கள் அறிவித்துள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்காக காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் வாரியாக கழக செயல்வீரர்கள் கூட்டம் கீழ்காணும் விவரப்படி, கீழ்க்கண்ட தேதிகளில் - கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களில் மிகவும் எழுச்சியான முறையில் நடைபெற உள்ளது.

அது பற்றிய விவரம்:-

| நாள் | நேரம் | ஒன்றிய – நகர– பகுதி– பேரூர் பெயர் |
|---|---|---|
| 4–11–2025 செவ்வாய்கிழமை | | |
| | காலை 9.00 மணி | திருப்போரூர் வடக்கு – தெற்கு ஒன்றியம் – பேரூர் |
| | காலை 11.00 மணி | திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம் – பேரூர் – மாமல்லபுரம் நகரம். |
| | மாலை 4.00 மணி | பல்லாவரம் வடக்கு – தெற்கு பகுதி – செம்பாக்கம் வடக்குப் பகுதி |
| | மாலை 6.00 மணி | பம்மல் வடக்கு – தெற்கு பகுதி – பொழிச்சலூர் – திரிசூலம். |
| 5–11–2025 புதன் கிழமை | | |
| | மாலை 3.00 மணி | செங்கல்பட்டு நகரம் |
| | மாலை 4.00 மணி | காட்டாங்குளத்தூர் தெற்கு – மத்திய ஒன்றியம். |
| | மாலை 5.00 மணி | மறைமலை நகர் வடக்கு – தெற்கு நகரம் |
| | மாலை 6.00 மணி | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகரம் |
| | மாலை 7.00 மணி | காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியம். |
| 6–11–2025 புதன் கிழமை | | |
| | காலை 9.00 மணி | திருப்பெரும்புதூர் வடக்கு – தெற்கு ஒன்றியம் – நகரம். |
| | காலை 11.00 மணி | குன்றத்தூர் தெற்கு – மத்திய ஒன்றியம். |
| | மாலை 4.00 மணி | குன்றத்தூர் நகரம் |
| | மாலை 5.00 மணி | மாங்காடு நகரம் |
| | மாலை 6.00 மணி | குன்றத்தூர் வடக்கு ஒன்றியம். |
| 7–11–2025 வியாழக்கிழமை | | |
| | காலை 9.00 மணி | ஆலந்தூர் வடக்கு – தெற்கு பகுதி, கண்டோன்மெண்ட் நகரம்– மூவரசம்பட்டு கவுல் பஜார். |
| | மாலை 4.00 மணி | செம்பாக்கம் தெற்குப் பகுதி, தாம்பரம் கிழக்குப் பகுதி. |
| | மாலை 6.00 மணி | பெருங்களத்தூர் வடக்கு – தெற்கு பகுதி, தாம்பரம் மேற்குப் பகுதி. |


**எனவே மேற்கண்ட நாட்களில் நடைபெறும் செயல் வீரர்கள் கூட்டங்களை அந்தந்த ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் கழகச் செயலாளர்கள் இணைந்து சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து, இக்கூட்டங்களில் கழக நிர்வாகிகள், BLA – 2, BLC, BDA, கழக அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரையும் பங்கேற்கச் செய்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.**

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**
**செயலாளர்**
**காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.**

### நெல்லை கிழக்கு மாவட்டம் –

# நாங்குனேரி - இராதாபுரம் தொகுதி பாக முகவர்கள் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் அறிவிப்பு!



நெல்லை, நவ. 3 -

நெல்லை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நாங்குனேரி, இராதா புரம் சட்டமன்ற தொகுதி (BLA2,) (BDA ) மற்றும் சிறப்பு வாக்காளர் திருத்தம் (SIR) ஆலோசனைக் கூட்டம் இன்று (3.11.2025) எனது (நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம. கிரகாம்பெல் ) தலைமையில் நடைபெறுகிறது.என அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க,கழக துணை பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி அவர்களின் வழிகாட்டுதலின் படி என் வாக்குச்சாவடி வெற்றிச்சாவடி (BLA2,)(BDA ) மற்றும் சிறப்பு வாக்காளர் திருத்தம் ஆலோசனை கூட்டம் இன்று (03.11.2025) திங்கள் கிழமை காலை 8.30 மணிக்கு வள்ளியூர் பி.ஆர்.மஹாலில் வைத்து இராதாபுரம் சட்டமன்ற தொகுதிக் கும்,காலை 10.30 மணிக்கு செங்குளம் அழகு மஹாலில் வைத்து நாங்குனேரி சட்டமன்ற தொகுதிக்கும் எனது தலைமையில் (கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகா ம்பெல்) நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ். ரவிச்சந்திரன்,சட்டத்துறை துணை செயலாளர் எஸ்.ராஜாமுகமது, தலைமை கழக வழக்கறிஞர் எஸ்.எஸ். மனோஜ் ஆகியோர்கள் பங்கேற்று சிறப்பு வாக்காளர் திருத்தம் (SIR) குறித்து சிறப்பிக் கின்றனர்.

ஆகவே நாங்குனேரி, இராதாபுரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் கள், மாவட்ட கழக நிர்வா கிகள், நாங்குனேரி, இராதாபுரம் தொகுதி களின் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள்,(BLA2,)(BDA) மற்றும் கழக வழக்கறிஞர்கள்,DLC, CLC, ULC, TLC அனைவரும் இந்த சிறப்பு வாக்காளர் திருத்தம் தொடர்பான ஆலோசனை கூட்டத்தில் தவறாமல் கலந்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. என் வாக்குச் சாவடி வெற்றி ச்சாவடி குறித்து.

2.SIR (சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த சீராய்வு) குறித்து.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.